# மக்கள் மறுவாழ்வு

மலர் : 5 ஐப்பசி-நவம்பர் 1986 விலை 75 காசுகள் இதழ் : 2


## நாடு திரும்பியோரை ஏற்போம்
## நாடு கடத்துவதை எதிர்ப்போம் !

# ஓர் அறைகூவல்!

**“மனித உரிமை நாளை (10·12.86) அனைத்துலகம் கொண்டாடுகின்ற தருணத்தில் தமிழ் நாடு எங்கும். தாயகம் திரும்பியோர் குடியேறி வாழும் அனைத்து இடங்களிலும் 7-12.86ம் நாளை ‘தாயகம் திரும்பியோர் நாளாக’ கடைப் பிடித்து தாயகம் திரும்பியோர்களின் மனித உரிமைகளை வென்றெடுப்போம்”**

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர், அகதிகளுக்கான திருமறை குழு (டெக்ராஸ்) இவ்வாறு அறைகூவல் விடுத்து, 7-12-86 அன்று தாயகம் திரும்பியோர் தினம் கொண்டாடிட முயற்சிகள் மேற் கொண்டுள்ளது.

இலங்கையிலிருந்து சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்த படியும், இனக்கலவரத்தினாலும் வந்துள்ள தாயகம் திரும்பியுள்ள மக்களின் எண்ணிக்கை இலட்சோபலட்சமாகும். இவர்களின் துயர் துடைக்க வழி இல்லை. இவர்களும் இந்தியர்கள். இவர்களை ஏற்று இவர்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டாமா?

தாயகம் திரும்பியோர்களின் பரிதாப நிலை பற்றி சிந்திக்கவும், அவர்கள் மறுவாழ்வுக்காக செயல்படவும் மேற்கொண்டு மக்கள் குடிப் பெயர்த்தப்படுவதை தவிர்க்கவும் இத்தினம் கடைப்பிடிக்கப் படவிருக்கிறது.

“இலங்கையில் பிறந்து வளர்ந்து, இலங்கையை வளப் படுத்திய ஐந்தரை லட்சம் தமிழர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

சிறிமாவோ - சாஸ்திரி, சிறிமாவோ - இந்திராவின் உடன்படிக்கைகளால் வலுக் கட்டாயமாக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு ‘அகதிகள்’ எனக் கேவலமாக அழைக்கப் படுகின்றனர்.

இந்திய அரசாலும், தமிழக அரசாலும் வீடற்றவர்களாய் வேலை வாய்ப்பற்றவர்களாய், கொத்தடிமைகளாய் ஆக்கப்பட்டு அரசியல் கட்சிகளால் வஞ்சிக்கப்படுகின்றனர்.

‘அகதிகள் காலனி’ என இழிவாக தமிழ் சமூகம் ஊருக்கு வெளியே இவர்களை ஒதுக்கியுள்ளது.

இவர்களைப் பாதுகாக்கத் தவறிவிட்ட அரசாங்கம், மேலும் 2 லட்சம் தமிழர்களைத் தமிழ்நாட்டிற்குக் கடத்தப் படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட ஐந்தரை லட்சம் தமிழர்களை நம்மவர்களாக ஏற்போம்!

இவர்களின் அடிப்படை உரிமைகளுக்காக சாதி, மத இன, மொழி வேறுபாடில்லாமல் குரல் கொடுப்போம்!

நண்பர்கள், பொதுமக்களின் மத்தியில் ஊர்வலம் கையெழுத்து இயக்கம், தந்தி, சுவரொட்டிகள், கலை வடிவங்கள், துண்டுப்பிரசுரங்கள் வாயிலாக ஐந்தரை லட்சம் மக்களுடன் இணைந்து போராடுவோம்!” என்று கூறியுள்ளது.

மனித உரிமை நாளை (10.12.87) அகில உலகம் கொண்டாடுகிற இத் தருணத்தில் 7.12.86 ம் நாளை ‘தாயகம் திரும்பியோர் தினமாகக்’ கொண்டாடி மனித உரிமைகளை வென்றெடுப்போம்!! என்று அனைத்து அமைப்புகள், தாயகம் திரும்பியோருக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. O

## கட்டுரைப் போட்டி

விபரம்

உள்ளே....

# மக்கள் மறுவாழ்வு

மலர்: 1 நவம்பர் '86 இதழ்: 2


## அரசு உதவியை நம்பியே வீணாகலாமா ?

தாயகம் திரும்பும் மக்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் பல்வேறுபட்ட உதவிகளும், சலுகைகளும், முன்னுரிமைகளும் வழங்கப்படுகின்றன. குறிப்பாக வீட்டு, வியாபாரக் கடன் மற்றும் வேலை வாய்ப்புகள்.

ஆனால் இந்த கடனும், வாய்ப்பும் உடனடியாக கிடைப்பதில்லை.இதற்காக சம்பந்த அலுவலகங்களுக்கு நடந்து நடந்து வீணாகிப் போகிறார்கள். ஈற்றில் கழுதை தேய்ந்துக்கட்டெறும்பு ஆன கதையாகிறார்கள்.

ஒரு நாள் அல்ல: இரண்டு நாட்களல்ல-பல வருடங்கள் இந்த உதவிகளுக்காக அலைகிறார்கள் அலைவதோடு மாத்திரமல்ல; சிறுக சிறுக சேமித்து சம்பாத்திக் கொண்டு வந்தப் பணத்தையும், பொருளை இதற்காகவே செலவு செய்து அழித்து விடுகிறார்கள். வாரத்திற்கு இரண்டோ, மூன்றோ நாட்கள் இந்த உதவிகள் பெறுவதற்காக செய்யும் வேலையையும் விட்டு விட்டு கிடைக்கும் ஊதியத்தையும் இழந்துவிட்டு, கையில் இருப்பதை சிலவு செய்தும் - கடன்பட்டும் அழிந்து போகிறார்கள். இவர்கள் சிலவு செய்ததை ஆய்வு செய்துப் பார்த்தால் எந்த கடனுதவிக்காக அலைகிறார்களோ அந்த கடனுதவித் தொகையை விட அதிகமாக சிலவு செய்து அழித்திருப்பார்கள், அப்போதும் உரிய கடனுதவி கையில் கிடைத்திருப்பதில்லை

தாயகம் திரும்பிய பலருக்கு வீடில்லை, வாசலில்லை, உரிய தொழில் இல்லை என்பதுஉண்மைதான் ஆயினும் அரசு அளிக்கும் மறுவாழ்வு உதவிக்காக வேலை வெட்டியை விட்டு - கிடைக்கும் வருவாயை விட்டு,இருப்பதைஇழப்பது என்பது இவர்கள் கண்ணை விற்று சித்திரம் வாங்கும் நிமைக்கு ஒப்பானது.

வீடில்லை; வாசலில்லை; தொழிலில்லை எந்த வாய்ப்பும் இல்லை என்பது உண்மைதான். ஆனாலும் மறுவாழ்வு உதவிகள் பெறாமலே (அதையும் நம்பிக் கொண்டு) பல ஆண்டுகளாக அன்றாட வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கவே செய்கிறார்கள். இந்த முயற்சிகளை சாதனையாகவே மேலும் முயற்சிகள் எடுத்து அதாவது சுயமுயற்சிகளை மேற்கொண்டு வாழவும் முன்னேற்றம் பழகிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம்.

இல்லை என்பது தாயகம் திரும்பியோர்களிடம் மட்டுமில்லை. இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் லட்சோப லட்சம் மக்களிடம உள்ளதுதான். ஆண்டாண்டு காலமாக வாழ ஒரு வீடில்லாது நடைபாதையில் வாழ்வோரை பார்க்கிறோம், நெல்சோறு சாப்பிட்டால் விருந்து சாப்பிட்டது போன்ற மகிழ்ச்சியடைகிற மக்களைப் பார்க்கிறோம் - ஆயினும் அவர்கள் சுயமாக எதிர்நீச்சல் போடுவதைப்பார்த்துத்தான் வருகிறோம்.

அவர்களைப்போல நாமும் ஏன் எதிர்நீச்சல் போடக்கூடாது. சுயமுயற்சியில் இறங்கக்கூடாது? அரசு உதவி என்று அலைந்து ஏன் வீணாக வேண்டும?

---

### வடாற்காடு மாவட்ட நூற்பாலை :

## தாயகம் திரும்பியோருக்கு பாகுபாடு காட்டப்படுகிறது !

சிரிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் வடஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலைக்குகண்டி தூதுவராகத்தின் மூலம் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் வேலைக்கு அமர்த்தப்பட்ட தாயகம் திரும்பியு (ஏறத்தாழ 275) தொழிலாளர்கள் இவ்வாலையில் வேலை செய்து வருகிறோம்.




இவ்வாலைக்கு 1972 73 ல் 15 நபர்களும், அதற்குபிறகு 1975,76,77ல் சுமார் 100 நபர்களும், 1982, 83ல் 178ல் நபர்களும் மத்திய அரசு, மாநில அரசுக்கு வழங்கி ஒல்வொரு நபருக்கு ரூபா 15000, ரூபா. 20,000 வீதம் ஆலைக்கு வழங்கப்பட்டு நாங்கள் வேலையில் அமர்த்தப் பட்டோம்.

எங்களுக்கு 1980ம் ஆண்டு வரை அரசு ஆணைப்படி சலுகைகள் கொடுக்கப்படாவிட்டாலும் தினமும் வேலையாவது கிடைத்து வந்தது. ஆனால் 1980க்குப் பிறகு எங்களில் சுமார் 60 நபர்களை ஆலை சட்டத்திட்டப்படி அல்லாது- யூ.எஃப் எஃப், ஆரின் இரண்டு பேச்சு வார்த்தைகளின் படி 5 வருடம் சென்று நிரந்தரம் செய்தனர்.

இடையில் 1982-ல் திரு கோபால கிருஷ்ணகாந்து இ.ஆ.ப அவர்கள் கைத்தறி இயக்குனராக வந்ததும் இந்த முறையை தளர்த்தி 2 வருடங்களில் 480 நாட்கள் வேலை செய்தவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற உத்தரவுப்படி 1982-ல் 40 நபர்களை (1978 வந்தவர்கள்) நிரந்தரம் செய்தனர்.

நிர்வாகம் அதே வேளையில் ஏனையவர்களுக்கும் (உள்ளூர்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## ஐந்தாவது ஆண்டு மலர்

### அதிக பக்கங்களில் வெளிவருகிறது

# "தாயகம் திரும்பியோர் அகதிகள் என்றால் காந்தியும் அகதிதான்"

"தாயகம் திரும்பியோர்கள் அகதிகள் என்றால் காந்தியும் அவரைப் பெற்ற இந்த நாட்டு மக்கள் அனைவருமே அகதிகள் தான். வந்தாரை வாழவைக்கும் இந்த நாட்டில்-இப்படி அழைக்கும் இந்த நாட்டில் மனிதனாகப் பிறந்த தற்காகவே வெட்கப்படுகிறேன்"

இவ்வாறு, 5-10-86 அன்று நீலகிரி, கோத்தகிரி மக்கள் மறுவாழ்வு மன்றத்தினரால் நடத்தப்பட்ட தாயகம் திரும்பியோர் நாள் - காந்திஜெயந்தி விழாவில் பேராசிரியர் பெரியார் தாசன் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், "தாயகம் திரும்பியோரது பிரச்சனைகளையும், இவர்களுக்கு உரிய சலுகைகளையும் இடையிலுள்ள அதிகாரிகள் சுரண்டுவது போன்றவற்றையும் முறியடிக்க எம்மிடையே ஒற்றுமை அவசியம்.

"ஒருவராகக் கேட்டால் கோரிக்கை; அதையே ஆயிரம் லட்சம் பேர் கேட்டால் அது ஆணையாகும்" என்றார் மார்க்ஸ்-ரஷ்யப் புரட்சி ஜப்பான் முன்னேற்றம் ஆகியவற்றிற்கு மக்கள் சக்திதான் காரணம்.

"எனவே ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் சமுதாய முன்னேற்றத்தில் பங்கெடுக்க வேண்டும். இதற்கு கெங்கரை சூராக்கரையில் ஆரம்பிக்கப் பட்டுள்ள மக்கள் மறுவாழ்வு மன்ற மகளிர் அணி ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்" என்றும் பேராசிரியர் பெரியார்தாசன் தெரிவித்தார்.

காந்தி நிவாரண மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு திரு. திருச்செந்தூரன் அவர்கள் தலைமைத் தாங்கினார்.

இக் கூட்டத்தில் தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு ஆய்வு மற்றும் தகவல் நிலையத்தின் இயக்குனர் திரு ஆர். ஆர். சிவலிங்கம் கலந்துக் கொண்டு பேசினார்.

அவர் பேசுகையில், தாயகம் திரும்பியோர் நாளையும், காந்தி ஜெயந்தி தினத்தையும் இணைத்துக் கொண்டாடிய தன் ஒற்றுமையை விளக்கிக் கூறினார். அத்தோடு காந்தி, நேரு, சாஸ்திரி ஆகியோருக்கும், நமக்கும் உள்ள தொடர்பு, ஒற்றுமை சொந்தம் ஆகிய வற்றை எடுத்துக்கூறினார். நாங்கள் இந்த நாட்டிற்கு அகதிகளாகவரவில்லை என்றும் அழைக்கப்பட்ட விருந்தாளிகளாக வந்துள்ளோம் என்றும் வலியுறுத்தியதுடன் எங்களுக்கென எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட உரிமைகளை சரியான முறையில் பெற நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து மக்கள் சக்தியாக போராட வேண்டுமெனக் கூறினார்.

அன்று இலங்கை மண்ணை வெளிப்படுத்திய இதே மக்கள் இங்கும் சும்மா இருக்கவில்லை. நீலகிரி மாவட்டம் இவர்களின் வருகையின் பின்தான் மேலும் மெருகு பெற்றிருக்கிறது. எனவே உழைப்பாளிகளாகியஎங்களுக்கு மறுக்கப்படுகின்ற உரிமைக்காக ஒன்றிணைந்துபோராட வேண்டியதன் அவசியத்தை விளக்கிக் கூறினார்.

இந்திய தேசிய மாதர் சங்கத்தின் உதகமண்டலப்பிரதிநிதியாகிய திருமதி சரோஜா அப்பாஜி பேசுகையில் தாயகம் திரும்பியோர்களுக்குள்ள கடன் உரிமைகள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படாமல் நடக்கும்ஊழல்களை வெளிபடுத்தியதோடு, 39 ஆண்டுகள் ஆகியும் நம் நாட்டின் சுதந்திரத்தின் நிலையைக் கூறி, தான்சார்ந்த சங்கத்தின் சார்பில் மக்கள் மறுவாழ்வு மன்றத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு நல்குவதாக உறுதி கூறினார்.

கொணவக்கரை பேரூராட்சி மன்றத்தலைவர் திரு. தாஸ், கோத்ததிரிப்பகுதி கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிதிரு. பெள்ளி திரு. தனகோபாலன் ஏ. சிவப்பிரகாசன் ஆகியோர் கலந்துக் கொண்டு பேசினர்.

இக்கூட்டத்திற்குதிரு. சந்திரசேகரன் வரவேற்புரையும், சாந்தகிருஷ்ணன் நன்றியுரையும் தெரிவித்தனர். திரு. டீன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை கூட்டத்தில் வாசித்தார்.

முற்பகல் ஊர்வலம் இடம் பெற்றது பலநூறு தாயகம்

(4-ம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. மறுவாழ்வு எங்கள் உரிமை.

இந்த உரிமை பல்லாயிரக் கணக்கான தாயகம் திரும்பியோருக்கு மறுக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படை உரிமையை அரசு வாக்குறுதியளித்து எமது மக்களை இந்தியாவிற்கு வரவழைத்துள்ளது. மறுவாழ்வு உரிமை மறுக்கப்பட்ட அனைவருக்கும், மீண்டும் மறுவாழ்வு உதவிகள் கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு, மைய அரசையும், தமிழக அரசையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

2. அரச தொழில் நிறுவனங்களில் தாயகம் திரும்பியோருக்கு தொழில் ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கு தாயகம் திரும்பியோர் மட்டுமே நியமிக்கப்படல் வேண்டும்.

3. தாயகம் திரும்பியோருக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ள கல்விச் சலுகைகள், அவர்களுக்கு கிடைப்பதில்லை மருத்துவம், பொறியியல், விவசாயம், ஆகிய தொழில்துறை கல்வியில் தாயகம் திரும்பியோருக்கான இட ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படல் வேண்டும்.

4. வீட்டுக்கடன்வழங்குதல், வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுப்பதில் உள்ள ஊழல்கள் தாமதங்கள் உடனடியாக கலையப்படல் வேண்டும்.

5. தாயகம்திரும்பியோருக்கு வீடு கட்டித் தருவதற்கான முழுப்பொறுப்பையும், தமிழக அரசு ஏற்க வேண்டும்.

6. தாயகம் திரும்பியோருக்கான மறுவாழ்வு வாக்குறுதிகள் 10 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்படல்வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு உதவி கோரும் உரிமை மறுக்கப்படும் முறை ஒழிக்கப்படல் வேண்டும். 10 ஆண்டுகளுக்கிடையில் எம் பொழுதேனும், வீட்டுக்கடன், தொழில் ஆகிய பிற மறுவாழ்வு உதவிகள் பெறுகின்ற வழிமுறைகள் உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.

7. தாயகம்திரும்பியோருக்கு ஒரு தவணை வியாபாரக்கடன் மட்டுமே கொடுத்து மறுவாழ்வு வழங்கும் பொறுப்பை தட்டிக் கழிக்கும் மனோபாவம்அறவே ஒழிக்கப்படல் வேண்டும். கூட்டுறவு அடிப்படையில் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

8. மாவட்ட ஆட்சி அலுவலகங்களில் மறு வாழ்வுக்கென தனி அரசு அலுவலர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

9. மைய அரசின் தென்னக மறுவாழ்வு அலுவலகம் நிறுவப்படல் வேண்டும்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பியோர் கலந்துக் கொண்டனர் இவ்வூர்வலத்தில். காந்தியின் உருவப்படத்தைத் தாங்கி, உரிமைகளை கோரும் சுலோக அட்டையுடன் ஊர்வலம் சென்றது.

நாங்கள் இந்தியர், சொல்லாதே, சொல்லாதே அகதி என்று சொல்லாதே போன்ற கோசங்கள் கோத்தகிரி எங்கும் அதிர்ந்தது.

கூட்டத்தில் பலர் வீறு கொண்ட பாடல்களை பாடினர். இவ்விழாவையொட்டி நடத்தப்பட்ட கட்டுரை, பாட்டுப்போட்டியில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

## பரிசு பெற்றோர்கள்

கோத்தகிரியில் நடைபெற்ற தாயகம் திரும்பியோர் நாள்-காந்தி ஜெயந்தி விழாவை யொட்டி இடம்பெற்ற கட்டுரை-கவிதைப் போட்டிகளில் பரிசு பெற்றோர்:

**கவிதைப் போட்டி:**

1. செல்வி கவிதா (மணவறை நகர்)
2. பி. சந்திரலிங்கம் (டானிங்டன்)
3. தட்சிணாமூர்த்தி (வள்ளுவர் நகர்)

**கட்டுரைப் போட்டி;**

1. எம்.யோகநாதன், (ஆவுக்கல்)
2. எஸ்.ஆனந்தராஜா (கெங்கரை)
3. வள்ளுவநேசன் (பரவக்கடவு),

**கோசங்கள் போட்டி :**

1. ஆனந்தராஜா (கெங்கரை,) வே.பாக்கிய நாதன் (ஆவுக்கல்)

# புதுக்கோட்டை முருகராஜ் காலனி: பயனுள்ள வளர்ச்சித் திட்டங்கள்

இலங்கையிலிருந்து சிரிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் திரும்பி, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களிலும், பிற மாநிலங்களிலும் குடியமர்த்தப்பட்டவர்களில்தங்களுடைய அனைத்து சொத்துக்களையும் தக்க வேலையின்றி இழந்தவர்களில் சிலர் புதுக்கோட்டை சம்மட்டிவிடுதிகிராமத்தில் குடியமர்ந்தார்கள். வேலையின்றி இழந்தவர்களில் இவர்கள் கிராமங்களில் ஆணுக்கு ஒரு ரூபாயும், பெண்ணுக்கு 75 காசும் தினக்கூலி வேலையை 1975-ம் ஆண்டு தொடங்கினார்கள். பல்வேறு இடத்திலிருந்து வந்த சுமார் 190 குடும்பங்கள் சம்மட்டி விடுதியில். குடியேறின இவர்களில் பெரும் பாலோர் கான்டிராக்டர்களிடம் பாஸ்போர்ட், குடும்ப அட்டை முதலிய வற்றைக் கொடுத்து ஏமாந்தவர்களே. தற்போது 70 குடும்பங்கள் இருக்கின்றன.

தங்களின் ஒரே வருமானம் கிராமங்களில் வேலை செய்து பிழைப்பதேயாகும். பல கஷ்டங்களை இக்குடும்பங்கள் எதிர்நோக்கிக் கொண்டிருந்த போது நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ்கொண்டு வரப்பட்ட நிலங்களில் அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு அரசாங்கத்தால் நிலம் வழங்கப்பட்டது ஏழ்மை நிலைமையில் வாழ்ந்து கொண்டிருந்த இவர்களுக்குச் சோதனையாக 1978-ம் ஆண்டு புயல் வந்தபோது இவர்களின் குடிசைகள் நாசமாயின. இருக்கக் குடியிருப்பின்றி இவர்கள் தவித்தபோது அப்போதைய புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. முருகராஜ் அவர்கள் கேயர் நிறுவனத்தின் உதவியால் புதிய குடிசை வீடுகள் கட்டிக் கொடுத்து உதவினார். அதன் பிறகு இது முருகராஜ் காலனி என்றே இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. வீட்டு மனைப்பட்டாவும் வழங்கப்பட்டது.

அரசு நிலம் கொடுத்தும் அதில் விவசாயம் செய்ய முதலீடு இல்லாத காரணத்தை அறிந்த தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணிசம்மேளனம் (யு.எப்.எப்.ஆர்) அவர்களுக்கு 1981யில் இலவசமாக விதை நெல்கொடுத்து உதவியது. ஒரு வருட காலம் இதில் விவசாயம் செய்தார்கள். பின் அரசு கொடுத்த நிலத்தில் தகராறு ஏழவே அது நில உரிமைப் பிரச்சினையாக உருவாகி, நீதிமன்றத்தில் இன்றும் வழக்காட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

1981-ம் ஆண்டு இக்காலனியில் [யு.எப்.எப்.ஆர்.] தாயகம் திரும்பியவர்களின் குழந்தைகளுக்காக "குழந்தைகள் காப்பகமும், நர்சரி பள்ளியும்" ஆரம்பித்து இன்று வரை நடந்து வருகிறது. இக்காலனியில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டபோது அரசால் ஆழ்கிணறு போடப்பட்டு அது செயல்படாது இருந்த காரணத்தால் இச்சம்மேளனம் ஒரு குடிநீர் கிணறு அமைத்துக் கொடுத்தது. மின்சார வசதியும் அளித்துள்ளது.

ஆண்கள் வெளியிடம் சென்றுவந்ததால் வருமானம் இன்றி இருந்த பெண்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த யு.எப்.எப்.ஆர். தனியாக ரூபாய் 40,000 செலவு செய்து கட்டடம் கட்டி 30 பெண்களுக்கு வேலைவாய்ப்பை கதர் கிராம வாரியத்தின் உதவியுடன் பெற்றுக் கொடுத்திருக்கிறது அம்பர்சர்க்கார் கைராட்டையில் 30 பெண்கள் பணிசெய்கின்றனர். நாளொன்றுக்கு ரூபாய் 5 முதல் 10 வரை வருமானம் பெறுகின்றனர்.

ஆண்களுக்கு நேபாளதறி அமைத்துக் கொடுத்து வேலை வாய்ப்புகள் அளிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. வயதான 20 பேர்களுக்கு பீடி சுற்றும் தொழிலிலும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

போதிய வருமானம்இல்லாததால் அவதியுற்ற இம்மக்கள் கேயர் நிறுவனத்தால் கட்டிக் கொடுத்த குடிசைகளுக்குக் கூரை வேய்ந்து கொள்ள முடியாமல் இடிந்த நான்கு சுவர்களுக்குள்ளே காலம் கடத்தி

(5-ம் பக்கம் பார்க்க)

## சென்ற விடமெல்லாம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னார்கள். இவர்களின் குடிசைகளுக்கு ஓடு போட்டுக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றது. இத்திட்டத்தின் ஒரு பகுதி இப்போது பூர்த்தியாகி விட்டது. 32 வீடுகளுக்கு இந்த உதவி அளித்திருக்கிறது. வீடொன்றுக்கு ரூபாய் 3,000 வீதம் செலவு செய்துள்ளது.

O

கடந்த 9-10-86 அன்று மேற்படி காலனியில், வளர்ச்சி திட்ட விழா கொண்டாடப் பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளர் திரு. இல. பழமலை இ.ஆ.ப அவர்கள் கலந்து கொண்டார். அம்பர் சர்க்கார் கைராட்டை, குழந்தை காப்பகம் ஆகியவற்றை திறந்துவைத்து பேசினார்.

அவர் பேசுகையில், ''அரசினாலேயே எல்லாவற்றையும் செய்துவிடமுடியாது. இது போன்ற தொண்டு நிறுவனங்கள் மக்களுக்கு பலவகையில் உதவ முடியும்'' என்றார்.

''நாங்கள் தாயகம் திரும்பியோர்க்கு வழங்கப்படும் உதவிகளை அரசிடம் இருந்து பெற்றுக் கொடுக்கும் பணிகளை செய்து உள்ளோம். இப்போது இது போன்று ஆங்காங்கே இருக்கும் தாயகம் திரும்பியோர்களின் வீட்டுப்பிரச்சனை, குடிநீர் பிரச்சனை வேலைவாய்ப்பு பிரச்சனைகள் என்று இருக்கும் பிரச்சனைகளில் கவனம் செலுத்தி வருகிறோம்'' என்றார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார், தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் திரு ஏ.என்.அப்பாவு அவர்கள்.

இந்தவிழாவிற்கு தலைமைத் தாங்கிய தா. தி. ஐ. மு. சம்மேளனத்தின் தலைவர் திரு. ஆர்.எம்.ராமச்சந்திரன் பேசுகையில், ''தாயகம் திரும்பியோர்களுக்கு பல உதவிகள் செய்யப்படுகிறது. ஆயினும்

(7-ம் பக்கம் பார்க்க)

# சேவா அமைப்புகளுக்கிடையே புரிந்துணர்வு வேண்டும் !

அரசே அனைத்தும் செய்து விடமுடியாது. தொண்டு நிறுவனங்கள் பல நல்ல பணிகளை மக்களுக்கு செய்ய முடியும் என்று ஒரு விழாவில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளர் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்தகருத்து முற்றிலும் சரி. அரசினால் செய்யமுடியாதபல பணிகளை தொண்டு நிறுவனங்கள் செய்து வருகின்றன. மிகச்சில அமைப்புகள் மிகச் சிறப்பாக சில சில பணிகளை தாயகம் திரும்பிய மக்களுக்கு செய்துவருகின்றன - தாயகம் திரும்பியோர்களும் உரிய பயன்கள் பெற்றிருக்கிறார்கள்.

ஆயினும், இப்படி சிறப்பான பயனுள்ள ஆக்கப்பணிகளை செய்து வரும் மிகச்சில சேவா அமைப்புகளால் மட்டும் தாயகம் திரும்பியோர்கள் அனைவருக்கும் பணி செய்து விட முடியுமா?

தாயகம் திரும்பியோர் தமிழ்நாட்டில் மட்டுமல்ல; கர்னாடகம், ஆந்திரா, கேரளம், அந்தமான் ஆகிய மாநிலங்களிலும் குடியேறியுள்ளனர் - நான்குலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் குடியேறியுள்ளனர்.

இவர்கள் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். இப்பிரச்னைகள் பலதரப்பட்டது. தொழில் பிரச்னை, வீட்டுப்பிரச்னை, கல்விப்பிரச்சனை தொழிற் தகராறுகள், நிலத்தகராறுகள் என பலவகைப்பட்டது.

இவர்கள் இப்பிரச்சனைகளை அரசின் உதவியினால் மட்டும் தீர்த்துக்கொள்ள முடியாது. அரசினால் அளிக்கப்படும் மறுவாழ்வு உதவிகளை நம்பியும் இருக்க முடியாது.

ஆகவே இவர்கள் சுய முயற்சிகள் மூலமே தமது மறுவாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும். சுய முயற்சியே இவர்களது முன்னேற்றத்திற்கு வழி சமைப்பதாகும்.

சுயமுயற்சியில் ஈடுபடுவதென்றால் தனிமனிதனாக நின்றும் சாதிக்க முடியாது என்பதும் நிதர்சனம். ஒன்று பட்ட கூட்டு முயற்சியினால் தான் இதை சாதிக்க முடியும்,

ஒன்றுபட்ட கூட்டு முயற்சி என்பது ஒரண்டு நிறுவனங்கள் சேவா அமைப்புகளாலேயே முடியும்.

இப்படி அமைக்கப்பட்ட பல அமைப்புகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான பணிகளில் ஈடுபடுகின்றன, மிகச் சில அமைப்புகள் தாயகம் திரும்பியோருக்கு பயன்படத்தக்க மிகச்சில நல்ல பணிகளில் ஈடுபடுகின்றன. ஆயினும் இந்த மிகச்சில இரண்டு மூன்று மட்டும் அமைப்புகளால் மொத்த தாயகம் திரும்பியோர்களின் பிரச்சனைகளைத் தீர்த்துவிட முடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆயினும் இந்த அமைப்புகள் மத்தியில் இந்த புரிந்துணர்வு இல்லை.

தாயகம் திரும்பியோருக்கு தாங்கள் மட்டுமே பணிசெய்ய உரிமை உடையவர்கள் தங்களாலேயே எதையும் சாதிக்க முடியும் என்ற மனோபாவம் கொண்டிருக்கின்றன.

இந்த எண்ணமே எல்லா அமைப்புகள் மத்தியிலும் இருக்கின்றன.

இந்த எண்ணம் இருந்து செயல்பட்டாலும் பரவாயில்லை: சில அமைப்புகள் இந்த எண்ணத்தில் இறுமாந்திருப்பதோடு சரி; எதையும் செய்வதில்லை; செய்யும் அமைப்புகளையும் குலைப்பதிலும், கலைப்பதிலும், தாயகம் திரும்பினோர்-அரசுதுறை மத்தியில் தவறான எண்ணங்களை பரப்புவதிலும் மூச்சாக இருக்கின்றன என்பதையும் நாம் மறுக்க முடியாது.

இம்மாதிரி சுயநலம் மிகுந்த தரகர்களைப்போல நடந்துக் கொள்ளும் அமைப்புகளை ஒதுக்கிவிட்டு உண்மையான பணிகளை செய்யும் அமைப்புகள் தங்களை புரிந்துக் கொண்டு செயலாற்ற வேண்டும்.

தாங்கள் மட்டும் பணி செய்ய உரிமைஉடையவர்கள் அல்ல; எல்லோருக்கும் உண்டு என்றும் தாங்கள் மட்டுமே எதையும் சாதித்து விடமுடியாது என்பதை உணர வேண்டும்.

அந்த உணர்வோடு ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு தொண்டு செய்யும் அமைப்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயல் ஆற்ற முன்வரவேண்டும். O

மக்கள் மறுவாழ்வு

சந்தா விபரம்

தனிப்பிரதி 75 காசு
ஆண்டு சந்தா ரூ. 10.00

விபரங்களுக்கு :

மக்கள் மறுவாழ்வு
சென்னை-600 094.

# தோட்டப் புறத்து (நாட்டுப்) பாடல்களில் காதல் சுவை

## ( 3 )

ஒருவர் மீது ஒருவர் மையல் கொள்கிறார்கள் தமது எண்ணத்தை சாடையில் வெளிப்படுத்துகிறார்கள்.

சாடையில் அவன் பேசுகிறான். அவள் கண்டுகொள்ளாமலே போகிறாள். அவள் சாடையில் பேச அவனும் கண்டு கொள்வதில்லை.

இது எத்தனை நாட்களுக்கு? அதிலே கொஞ்சம் முன்னேற்றம்....சாடையிலே பதிலும் பறிமாறப்படுகிறது.

அவள் அணிந்திருக்கும் சாயச்சீலை அவனைக் கவர்கிறது. அதை அவன் துணைக்கழைத்துக் கேட்கின்றான்-

''வட்டப்வட்டப்பாதையிலே
வளைஞ்சி வளைஞ்சி போகையிலே
யார் கொடுத்த சாயச்சீலை
ஆலவட்டம் போடுதடி''

அதைக்கேட்ட அவள் சொல்கிறாள்:

''ஆரும் கொடுக்கவில்லை
அன்னியரிடம் சம்பாதிக்கவில்ல
கஷ்டப்பாடு பட்டல்லோ
கட்டினன்டா சாயச்சீல''

பிறிதொரு பாடல்:

''வட்டவட்டப் பாதையிலே
வரகரிசி தீட்டையிலே
ஆர்கொடுத்த சாயச்சீலை
ஆலவட்டம் போடுதடி''

''ஆரும் கொடுக்கவில்ல
அவிசாரி யாடவில்லை
வன்பாடுபட்டு நானும்
வாங்கினேன்டா சாயச்சீல''

(குறிப்பு: பாதையிலே என்பதை திட்டிலே என்றும், சீலை என்பதை சோமன் என்றும் பாடுவது உண்டு.)

யார் கொடுத்த சாயச்சீலை என்று கேட்டதும் அவளுக்கு கோவம் வருகிறது. கஷ்டப்பட்டு அல்லவா சம்பாதித்து வாங்கிக் கட்டினேன் அப்படி இருக்க யார் கொடுப்பது? யாரும் கொடுக்கும் அளவிற்கு நான் கெட்டுப் போய்விட வில்லை என்று புலப்படுத்துவதாம்.

O

அவளை அவன் சாதாரணமாக எடைப்போட்டு வைத்திருக்கவில்லை. பெரும் மதிப்பு வாய்ந்தவளா எண்ணுகிறாள். விலைஉயர்ந்த மோதிரமாக, கல்பதித்த நகையாக எண்ணி அவளை சொந்தம் கொண்டாட எண்ணுகிறான். சுண்டு விரலாகவும் அவளை நினைக்கிறாள்.

ஒருநாள்,

''கல்லு வெள்ளி மோதிரமே
கல்பதிச்ச மேமுருக்கே
சுண்டுவிரலாமே-உன்ன
சொந்தமுனு எண்ணலாமா?''

என்று வினவுகிறான்,

அவளோ,

''முத்துப் பதிச்சிருக்கும்
முகவேலை செஞ்சிருக்கும்
பத்துப்பணம் கொடுத்தால்
பார்க்கலாமே கண்ணாடி''

என்று சொல்கிறாள். சும்மா சொந்தம் கொண்டாட முடியுமா? முறையாக வந்து பரிசம் போடுங்கள், அப்போது சொந்தமாகலாம் என்று நயமாக உரைக்கிறாள்.

O

அவனுக்கு மட்டும்தான் காதலை வெளிப்படுத்த எண்ணமா-துடிப்பா?

அவளுக்கு அதே துடிப்புதான். ஒருநாள் பாதையிலே போகும் அவன் அவளைப் பார்த்ததும் பார்க்காமலே போகிறான்.

அவள் கேட்கிறாள்-

''சாயவேட்டி பெறட்டிக்கட்டி
சாடையிலே போற மச்சான் ஒன்
சாயவேட்டி நிழலுல நான்
சாய்ந்திருக்க சம்மதமா?''

அவள் அழகில் ஒன்றும் குறைச்சலில்லை. கிளிமூக்கு போல அவளுக்கு மூக்கும் செந்தாமரைப்பூப்போல குவிந்த முகமும் கூட. பேச்சும் கிளியின் பேச்சுதான்.

ஆனாலும் அவனை என்னவோ அவள் கவரவில்லை. பேசவே அவனுக்கு மனசில்லை. பதில் சொல்கிறான்,

''மூக்கும் கிளிமூக்கு
முகமும் செந்தாமரைப்பூ
பேச்சும் கிளிப்பேச்சு - உங்கிட்ட
பேசவல்ல நேரமில்ல''

## 'தேனூரன்'

சிலவேளை இக்காதல் சைக்கிளையாவது முண்டு. காதலுக்குத்தான் கண்ணில்லை என்பார்களே. அதற்கு விவஸ்தையும் இருப்பதில்லை.

அப்படியொரு காதலைப்பார்ப்போமே!

''பலாப்பழமே
பழம்பொறுக்கும் செம்புகமே
நீலக்கருங்குயிலே
நிக்கட்டுமா? போகட்டுமா?''

என்று மெல்லக்கேட்கிறான். அவளோ-

''நிக்கச்சொன்னா நெடுந்தூரம்
போகச்சொன்னா பொல்லாப்பு
நானொருத்தன் பெண்டாட்டி
நானென்ன செய்திடுவேன்''

என்றாள். அவனுக்காக நின்றாள் அது எத்துணை குற்றம்! காதலித்த அவனும் பரிதாபத்திற்குரியவன். சங்கடத்தோடு பதில் சொல்கிறாள்.

O

கூடைக்கு மேல் குடைவைத்து கொழுந்தெடுக்க அவள் போய் கொண்டிருக்கிறாள். அவளிடம் பேச வேண்டுமென்று அவனுக்கு ஆசை.

''கூடமேலே கூடவச்சி
கொழுந்தெடுக்கப் போற பெண்ணே!
கூடைய எறக்கி வச்சி கொஞ்சம்
குளிர்ந்த வார்த்தை சொல்லிப்போடி''

என்று அவன் கேட்க, அவளோ- (7-ம் பக்கம் பார்க்க)

# புதுக்கோட்டை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவை இடைத்தரகர்களில் உரியவர்களுக்கு கிடைக்காமல் போகிறது. இதைத்தடுக்க அனைவரும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

இந்த விழாவில், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. வை. கோ. இராசன், ஒன்றிய ஆணையர் திரு சே.கு.ராஜராமன், சம்மட்டி பஞ்சாயத்து தலைவர் திரு ஆர்.கணேசன், வட்டாட்சியாளர் திரு. ராஜகோபால், புதுக்கோட்டை திட்ட அலுவலர் கெஸ்பர் அமல்தாஸ், சாமுவேல் ரட்ணம், காலனியைச் சேர்ந்த ராஜேந்திரன் ஆகியோர் பேசினர்.

இந்த காலனித்திட்டங்கள் சிறப்புற நடக்கவும், வெற்றி பெறவும் துடிப்போடு பணி செய்யும் சம்மேளனத்தின் புதுக்கோட்டை அமைப்பாளர் திரு.கதிரேசன் நன்றியுரைகூறினர்.

O

''இந்த காலனியை வந்துப் பார்க்கும்போது, இங்கு ஏற்படுத்த பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களைகவனிக்கும்போது நமக்கு மகிழ்ச்சியும், நம்பிக்கையும் ஊட்டுவதாக இருக்கிறது.

இன்றைக்கு தமிழகத்தில் தாயகம் திரும்பியோர் குடியேறியுள்ள காலனிகள் எல்லாமே தோல்விகண்டுவிட்டன. காலனிகள் காலியாகவே இருக்கிறது. காலனிகளை விட்டு அகன்றவர்களை மீண்டும் அழைத்து அங்கேயே நிலையாக குடியேற்றி வாழ்வளிக்க சில அமைப்புகள் எடுக்க முயலும் முயற்சியில், தா. தி. ஐ.மு.சம்மேளனத்தின் இங்கு செய்துள்ள பணிகள் ஓர் முன்முயற்சியாகும்''

இவ்வாறு இந்தவிழாவில் கலந்துக்கொண்ட, மக்கள் மறுவாழ்வு ஆசிரியர் திரு. டி.எஸ். ராஜு தெரிவித்தார்.

O

இந்த விழாமுடிந்ததும், சம்மேளனத்தின் நிர்வாகிகளிடம் காலனியைச்சேர்ந்த பெண் ஒருவர் ''தனக்கு எப்போது வேலை கிடைக்கும்'' என்று கேட்கிறார்.

இது ஓர் நம்பிக்கை ஊட்டும் காட்சி.

வேலை தேடி ஊர்விட்டு ஊர், மாவட்டம் விட்டு மாவட்டம், மாநிலம் விட்டு மாநிலம் சென்றும்வாழும் தாயகம்திரும்பியோர் தாங்கள் வந்து குடியேறிய காலனிகளிலே நிலைத்து நிற்க இது நம்பிக்கையூட்டும் காட்சி.

இந்த பணிகள் தொடர வேண்டும்.

-மோகன் குமார்

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

''கூடைய எறக்க மாடடேன்
குளுந்த வார்த்த சொல்லமாட்டேன்
வானவாச தருமரோட
வணங்கினதும் மோசம்தானே''

என்கிறாள். ஆண்கள் மீது அவளுக்கு நம்பிக்கை இல்லை. நம்பினால் மோசம்தான் என்கிறாள்.

பிறதொரு பாடல்

அவள் குளிர்ந்த வார்த்தை பேசமுடியாது. காரணம் அவளோ இன்னொருவன் பெண்டாட்டி.

''.........................
குளிர்ந்த வார்த்தை சொல்லமாட்டேன்
என் புருஷன் கோபக்காரன்,
எடுத்திடுவான் கோப்பிக் கத்தி''
(கொண்ட கணவன் கண்டால்
கோப்பிக்கத்திய தூக்கிடுவான்)

என்று தான் இன்னொருவன் பெண்டாட்டி என்றும் அவனுக்கு உணர்த்துகிறாள்.

பிறிதொருபாடல்

இப்படி நீ கேட்டிருக்கலாமா? கேட்டதே தப்பு? என் குடும்ப நிலை என்ன தெரியுமா என்பது போல சொலகிறாள்-

''என்புருசன் கங்காணி
என் கொழுந்தன் கவ்வாத்து
எளைய கொழுந்தனுமே
இஸ்டோரு மேல்கணக்கு''

(குறிப்பு:- கங்காணி-மேற்பார்வைப் பார்க்கும் வேலை; கவ்வாத்து - வளர்ந்த பழைய தேயிலையை வெட்டுதல் (Pruning) இஸ்டோர்: தேயிலை அரைக்கும் தொழிற்சாலை)

(தொடரும்)

---

# தாயகம் திரும்பி ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்) இதேபோல் செய்தது.

இதன்பின் ஆலையில் அதிகமானவர்கள் என்று கூறி 1980 முதல் 1983 வரை மாதம் 5,10 நாட்கள் **லே ஆப்** கொடுத்து சீனியர்களான எங்களையே அனுப்பி வந்தது. 1984 முதல் ஆலையின் நிர்வாக சீர் கேட்டின் காரணமாக ஆலையில் வேலை செய்யும் தாயகம் திரும்பியோர்களாகிய எங்களை மாதம் 6 நாட்கள் 10 மட்டும் வேலை கொடுத்து வந்தது. இன்றும் கொடுத்து வருகிறது.

இது சம்பந்தமாக பலமுறை மறுவாழ்வு இயக்குனர், தொழில் உறவு ஆலோசகர், தொழிலாளர் நல அலுவலர்கள், மாவட்ட ஆட்சியாளர் என்று மாறிமாறி வந்தவர்கள் அனைவரிடமும்எத்தனையோ முறை முறையீடு செய்துள்ளோம். பேச்சுவார்த்தைகள்பல நடத்தியதோடு அடையாள உண்ணாவிரதமும் இருந்தும் இதுவரை எங்களுக்கு 26 நாளும் வேலை கொடுக்க முன்வரவில்லை.

இதனால் தாயகம் திரும்பியோர்கள் உரிய வேலை நாட்களுக்கு வேலை கிடைக்காததால், உரிய வருமான இல்லாத நிலையில் கடன்கள் வாங்கிவாழும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியாமல்-வேலை வராமல் நின்று விட்டவர்களும் பலர் சில குடும்பத்தில் குழந்தை குட்டிகளே இல்லாதவர்கள் கூட பணத்துக்காக குடும்பக்கட்டுப்பாடு செய்துக்கொண்டுள்ள கொடுமைக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

இந்த நிலை நீடித்துக் கொண்டே போகிறது மீண்டும் போராட்டத்தில் குதிக்கவும், உண்ணாவிரதமும் இருப்பதைத்தவிர வேறு வழியில்லை சிறைக்கு செல்லவும் முடிவு செய்து செய்து விட்டோம் இதை குமுறும் நெஞ்சத்தோடு தெரிவிக்கிறோம்,

மேலும் இலங்கை இந்தியர் என்ற பாடுபாட்டுடன் ஆலை மேஸ்திரிகளும், அலுவலர்களும் நடந்து கொள்வதே இதற்கு முக்கிய காரணம்.

இன்றைக்கு எங்கள் பிரச்சனை பூதாகரமான பிரச்சனையாக இருந்து வருகிறது. இதற்கு எப்போதுதீர்வுகிடைக்கும் என்று புரியவில்லை.

-முருகன்

வடாற்காடு மாவட்ட
கூட்டுறவு நூற்பாலை
வேலூர்.

---

Editor & Publisher: T. S. RAJU, 1, South Gangai amman koil 2nd Street, Madras-600 094. Printed: L S. Srinivasan at Jai Kalidas Press, 29, B. E. Colony, 4th Street, Madras-24.

Regd. No, R. N. 42556/83 'Regd. No. TN/MS (C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின் வழிகாட்டி

# மக்கள் மறுவாழ்வு

தொடர்பு முகவரி :
அஞ்சல் பை எண். 5560
சென்னை—600 094

# கூட்டுறவு மூலம் பீங்கான் தொழிற்சாலை அமைக்க முயற்சி

நீலகிரி மாவட்டம கொளப்பள்ளியில் கூட்டுறவு மூலம் செராமிக் கண்ணாடி, பீங்கான் தொழிற்சாலையொன்று அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அரசுக்கு உத்தேச தீர்மானம் அனுப்பியுள்ளனர்.

இந்தஉத் தேசதீர்மானத்தை கொளப்பள்ளி விவசாய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவரும், தாயகம் திரும்பியோர் முற்போக்கு இயக்கத்தின் செயளாருமான திரு.டி.பர்லகிருஷ்னன் அனுப்பியுள்ளார். செலுமிக், கண்ணாடி மற்றும் பீங்கான் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்கள் இப்பகுதியில் நிறைய இருப்பதால் இத்தொழிலை ஆரம்பிப்பதன் மூலம் வேலையற்றிருக்கும் மக்களுக்கும் இங்கு வந்துகுடியேறியிருக்கும் தாயகம் திரும்பியோருக்கும் வேலைவாய்ப்புகள் அளிக்க முடியும்.

இந்த வாய்ப்பை அடிப்படையாக வைத்து, 'கொளப்பள்ளி செராமிக் அன்ட் கிளாஸ் மனுபெக்ரிங் கூன்டஸ்ட்ரீஸ் கோவப்ரட்டி பேக்டரி லிமிட்டெட்'' என்று கூட்டுறவு மூலம் ஒரு தொழிற்சாலையை அமைத்து அனுமதி கோரும் இத்தேச தீர்மானம் ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

# கட்டுரைப்போட்டி

7-12-86 அன்று கடைப்பிடிக்கப்பட்ட விருக்கும் தாயகம் திரும்பியோர் தினத்தையொட்டி டெக்டாஸ் அமைப்பு கட்டுரைப் போட்டி ஒன்று நடத்துகிறது.

**கட்டுரைத் தலைப்பு:**

1. தாயகம் திரும்பியத் தமிழ்ச்சமுதாயத்தை ஐக்கியப் படுத்துவது எப்படி?
2. தாயகம் திரும்பியோருக்கு மாற்று மறுவாழ்வுத் திட்டங்கள்.

இவற்றுல் ஏதாவது ஒரு தலைப்பில் எழுத வேண்டும். கட்டுரை புல்ஸ்கேப் தாளில் 4 பக்கங்களில் (தட்டச்சில் 2 பக்கங்கள்) இருக்கவேண்டும்.

முதல் பரிசு ரூபா 300
இரண்டாவது பரிசு ரூபா 200

வயது வரம்பு இல்லை.

கட்டுரை கிடைக்க வேண்டிய கடைசி திகதி:

நவம்பர் 15, 1986

அனுப்ப வேண்டிய முகவரி:

டெக்ராஸ்-கட்டுரை
சி. எல். எஸ். பில்டிங்,
பார்க்டவுன்,
சென்னை-600 003.

# நீங்களும் ஏமாந்தவரா ? முழு விபரம் எழுதுங்கள்

வீட்டுக்கடன் பெறுவதிலும் வீடுகட்டுவதிலும் பல ஊழல்கள் நடந்துவருவது அனைவருக்கும் தெரிந்ததே. புதுக்கோட்டை மாவட்டத்தில் வந்துக் குடியேறி இருக்கின்ற தாயகம் திரும்பியோர்கள் மட்டுமல்ல பிறமாவட்டங்கள், மாநிலங்களில் குடியேறி இருக்கும் தாயகம் திரும்பியோர்களின் குறிப்பாக மலைப் பகுதிகளில் சென்று வாழுகிறவர்களின் பெயர்களிலும் வீட்டுக்கடன்கள் வாங்கப் பட்டுள்ளன என்பது போன்ற புகார்கள் உண்டு. இதில் நீங்களும் ஒருவராக இருக்கலாம்.

இவ்வாறு மலைப்பகுதிகளிலும் சென்று குடியேறியுள்ள தாயகம் திரும்பியவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் வீடு கட்டிக் கொள்ள கான்டிராக்டர் மற்றும் இடைத் தரகர்கள் மூலமாக வீடுகட்ட மனு செய்தவர்கள் அனைவரும் தங்களின் குடும்ப அட்டை எண், பாஸ்போர்ட் எண், காண்டிராக்டர், இடைத்தரகர்கள் பெயர், கொடுத்த திகதி, தங்களுக்கு வீடுகட்டிக் கொடுப்பதாக தெரிவித்த இடம் ஆகிய முழுவிபரங்களையும் திரு.கே.கதிரேசன், கிளை அமைப்பாளர், தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி சம்மேளனம், 16, வசந்தா லாட்ஜ், புதுக்கோட்டை 622001 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற் கொண்டுள்ளனர்.